முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

முன்னிலை : திரு. V. பத்மநாபன், M.A. M.L., D.H.,
முதன்மை மாவட்ட நீதிபதி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள், திங்கட்கிழமை.

மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023
(Filing No.AS/130/2023)
(CNR No.TNPB01-000792-2023)
மற்றும்
மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024
(Filing No.AS/530/2023)
(CNR No.TNPB01-003470-2023)

<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023</u>

1. நல்லம்மாள், 45/2023,
க/பெ.(லேட்) கண்ணுசாமி.

2. ஜெகநாதம், 25/2023,
க/பெ.மருதை.

3. சூரியகாந்தி, 23/2023,
த/பெ.கண்ணுசாமி,
மேற்படியார்கள் குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். .... மேல்முறையீட்டார்ளர்கள்/
வாதிகள்.

–எதிர்–

1. சந்திரசேகரன், (இறந்தார்).

2. தேவேந்திரன், 45/2023,
த/பெ. சந்திரசேகரன்.

3. ரெங்கநாயகி, 50/2023,
க/பெ.ராமகிருஷ்ணன்.

4. மணிமேகலை, 47/2023,
க/பெ.செல்லமுத்து.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:34:13 +0530

5, வேல்முருகன், 27/2023,
த/பெ.தேவேந்திரன்.

6. ராஜசேகர், 25/2023,
த/பெ.தேவேந்திரன்.

7. ராமராஜன், 25/2023,
த/பெ.ராமகிருஷ்ணன்.

8. ரமேஷ், 23/2023,
க/பெ.ராமகிருஷ்ணன்.

9. அழகம்மாள், 65/2023,
க/பெ.சந்திரசேகரன்,
மேற்படி 1 முதல் 9 மேல்முறையீட்டாளர்கள்
முருக்கன்குடி அஞ்சல், குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.

10. மேலாளர், சர்க்கரை ஆலை லிட்.,
பெரம்பலூர்.

11. கிளை மேலாளர்,
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா,
லப்பைக்குடிக்காடு அஞ்சல்,
பெரம்பலூர்.

12. சதாசிவம் (இறந்தார்).

13. மேகவர்ணன், 55/2023,
த/பெ.லேட் சதாசிவம்.

14. அரியபுத்திரன், 55/2023,
த/பெ.லேட் சதாசிவம்,
மேற்படி 13 மற்றும் 14 மேல்முறையீட்டாளர்கள்
முருக்கன்குடி அஞ்சல், குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். .... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
பிரதிவாதிகள்.

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:34:20 +0530

( 1ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் இறந்துவிட்டதாக 02.06.2025ஆம் தேதி தாக்கல் செய்த குறிப்பாணையின்படி இம்மேல்முறையீடு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024

1. சந்திரசேகரன், (இறந்தார்).

2. தேவேந்திரன், 45/2023,
த/பெ. சந்திரசேகரன்.

3. மணிமேகலை, 47/2023,
க/பெ.செல்லமுத்து.

4. வேல்முருகன், 27/2023,
த/பெ.தேவேந்திரன்.

5. ராஜசேகர், 25/2023,
த/பெ.தேவேந்திரன்.

6. அழகம்மாள், 65/2023,
க/பெ.சந்திரசேகரன்,
மேற்படியார்கள்
முருக்கன்குடி அஞ்சல், குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். .... மேல்முறையீட்டாளர்கள்/
1, 2, 4 முதல் 6 மற்றும் 9 பிரதிவாதிகள்.

–எதிர்–

1. நல்லம்மாள், 45/2023,
க/பெ.(லேட்) கண்ணுசாமி.

2. ஜெகநாதம், 25/2023,
க/பெ.மருதை.

3. சூரியகாந்தி, 23/2023,
த/பெ.கண்ணுசாமி,
மேற்படியார்கள் குன்னம் வட்டம்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:34:25 +0530

பெரம்பலூர் மாவட்டம். .... எதிர்மேல்முறையீட்டார்ளர்கள்/ வாதிகள்.

4. ரெங்கநாயகி, 50/2023,
க/பெ.ராமகிருஷ்ணன்.

5. ராமராஜன், 25/2023,
த/பெ.ராமகிருஷ்ணன்.

6. ரமேஷ், 23/2023,
க/பெ.ராமகிருஷ்ணன்,
மேற்படி 4 முதல் 6 எதிர்மேல்முறையீட்டாளர்கள்
முருக்கன்குடி அஞ்சல், குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.

7. மேலாளர், பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிட்.,
பெரம்பலூர்.

8. கிளை மேலாளர்,
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா,
லப்பைக்குடிக்காடு அஞ்சல்,
பெரம்பலூர்.

9. சதாசிவம் (இறந்தார்).

10. மேகவர்ணன், 55/2023,
த/பெ.லேட் சதாசிவம்.

11. அரியபுத்திரன், 55/2023,
த/பெ.லேட் சதாசிவம்,
மேற்படி 10 மற்றும் 11 எதிர்மேல்முறையீட்டாளர்கள்
முருக்கன்குடி அஞ்சல், குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ 3, 7, 8, 10 முதல் 14 பிரதிவாதிகள்.

இந்த இருமேல்முறையீடுகளும் அசல் வழக்கு எண்.49/2010ல் சார்பு நீதிமன்றம், பெரம்பலூர் 31.10.2022 அன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:34:30 +0530

<u>கீழமை நீதிமன்றத்தில் தரப்பினர் விவரம்:–</u>

1. நல்லம்மாள்.
2. ஜெகநாதம்.
3. சூரியகாந்தி. .... வாதிகள்.

–எதிர்–

1. சந்திரசேகரன், (இறந்தார்).
2. தேவேந்திரன்.
3. ரெங்கநாயகி.
4, மணிமேகலை.
5, வேல்முருகன்.
6. ராஜசேகர்.
7. ராமராஜன்.
8. ரமேஷ்.
9. அழகம்மாள்.
10. மேலாளர், சர்க்கரை ஆலை லிட்., பெரம்பலூர்.
11. கிளை மேலாளர், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பெரம்பலூர்.
12. சதாசிவம் (இறந்தார்).
13. மேகவர்ணன்.
14. அரியபுத்திரன். .... பிரதிவாதிகள்.

இம்மேல்முறையீடுகள் என் முன்பு 24.03.2021அன்று இறுதி விசாரணைக்கு வரப்பட்டு, மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023–க்கு மேல்முறையீட்டாளருக்கக வழக்கறிஞர் திரு.ஜி.சுப்ரமணியன், அவர்கள் ஆஜராகியும், 3, 7 மற்றும் 8 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் திரு.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 2, 4, 5, 6, 9, 13 மற்றும் 14 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.ராதாகிருஷ்ணமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், 10ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காக அரசு தரப்பு வழக்கறிஞர் செல்வி.ஆர்.சந்தானலெட்சுமி அவர்கள் ஆஜராகியும், 11ஆம் எதிர்மேல்முறையீட்டாளரை தோன்றாத் தரப்பினராக பாவித்தும், 1 மற்றும் 12 எதிர்மேல்முறையீட்டாளர்கள் இறந்துவிட்ட நிலையில், மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024–க்கு மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.ராதாகிருஷ்ணமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் திரு.ஜி.சுப்ரமணியன் அவர்கள்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:34:35 +0530

ஆஜராகியும், 4 முதல் 6 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் திரு.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், 7ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காக அரசு தரப்பு வழக்கறிஞர் செல்வி.ஆர்.சந்தானலெட்சுமி அவர்கள் ஆஜராகியும், 8ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு. என்.சீனிவாசமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 9ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் இறந்துவிட்ட நிலையிலும், 10 மற்றும் 11 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தோன்றா தரப்பினராக பாவித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டபின், இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்.,

<u>பொதுவான தீர்ப்புரை</u>

மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023 வழக்கானது பெரம்பலூர் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.49/2010—ல் 31.10.2022ஆம் தேதி வாதிகளுக்குரிய பாகம் குறித்து பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை மாற்றியமைக்கவேண்டியும், 'பி' அட்டவணை சொத்தை பொறுத்து பாகம் வழங்க கோரியும் மற்றும் பின் நஷ்டி செலவுத்தொகைக்கோரியும் மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல்.

மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024 வழக்கானது அசல் வழக்கு எண்.49/2010—ல் பெரம்பலூர் சார்பு நீதிமன்றம் 31.10.2022ஆம் தேதி பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்க கோரி மேல்முறையீட்டாளர்கள்/1, 2, 4 முதல் 6 மற்றும் 9 பிரதிவாதிகளால் தாக்கல்.

2. <u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:

வாதிகள் இந்த வழக்கினை தாவா சொத்துக்களில் தங்களுக்குள்ள 1/3 பாகம் வேண்டி பாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தாவாச் சொத்துக்கள் யாவும் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளை உள்ளடக்கிய இந்து கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள். தாவா 1வது அயிட்ட சொத்துக்கள் 2, 3 வாதிகளின் தந்தை வழி தாத்தாவின் தந்தை கண்ணுசாமிக்கு பாத்தியப்பட்டு இருந்து, அவர் சதாசிவம், சந்திரசேகரன் ஆகிய இரண்டு மகன்களுக்கும், நீண்ட நாட்களுக்கு முன்பே வாய்மொழியாக பாகம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:04 +0530

பிரிக்கப்பட்டு அவரவர்கள் பாகத்தை, அவரவர்களே தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள். அந்த வகையில் தாவா முதல் அயிட்ட சொத்துக்கள் 2, 3 வாதிகளின் தந்தை வழி தாத்தாவும், 1–வது பிரதிவாதியுமான சந்திரசேகரனுக்கு ஒதுக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்தது. வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளால், தாவா 23, 24 அயிட்ட சொத்துக்களானது, மேற்படி 1 முதல் 22 அயிட்ட சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு 7, 8 பிரதிவாதிகள் பெயரில் அவருக்கு கார்டியனாக 9–வது பிரதிவாதி போடப்பட்டு கிரையம் பெறப்பட்டது. அதுவும் வாதிகளின் குடும்ப சொத்தாகும்.

1–வது பிரதிவாதிக்கு, 1–வது வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தந்தையுமான கண்ணுசாமியும், 2ஆம் பிரதிவாதியும் மகன்கள் ஆவார்கள், மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மகள்கள் ஆவார்கள். 3, 4 பிரதிவாதிகள் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பே திருமணமாகி, அவர்களுக்கு உரிய சீர்வரிசை செய்யப்பட்டுவிட்டது, ஆகையால் அவர்கள் வாதிகளை உள்ளடக்கிய குடும்பத்தில் இந்து வாரிசுரிமை சட்டம் (தமிழ்நாடு திருத்தம்) படி பங்குரியர் ஆக மாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு தாவா சொத்துக்களில் எந்தவித பாக உரிமையும் கிடையாது. தாவா சொத்துக்களை வாதிகளும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு மொத்தம் 1/3 பாக உரிமையுள்ளது. வாதிகளும் மற்றும் 1, 2 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள்.

வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் இதுநாள் வரை ஒன்றாகவே ஒரே கூரையின் கீழ் வாழ்ந்து வந்தார்கள், ஆனால் சமீபத்தில் இந்த வழக்கின் 2–வது வாதியின் திருமணத்தின்போது, வாதிகளுக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக தாவாச்சொத்துக்களில் வாதிகளுக்குள்ள 1/3 பாக உரிமையை ஏமாற்றும் நோக்கத்துடனும், மேற்படி சொத்துக்களில் சிலவற்றை 2 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயருக்கு கடந்த 12–04–2007 அன்று

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:08 +0530

தான பத்திரத்திம் ஏற்படுத்தியுள்ளார். மேற்படி தான பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அவைகள் யாவும் வாதிகளின் பங்கினை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். அதனால் எந்தவித உரிமையும், அனுபவமும் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு ஏற்படாது. தான செட்டில்மெண்டுகள் ஏற்பட்ட சொத்துக்கள் யாவும், இந்து கூட்டுக்குடும்ப சொத்துகள். ஒரு இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களைப் பொறுத்து, ஒரு கூட்டுக்குடும்ப பங்குரியர், எந்த நபருக்கும் தான செட்டில்மெண்டு ஏற்படுத்த உரிமையில்லை, அவ்வாறு ஏற்படுத்தினாலும், அவைகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி பத்திரம் எந்த கூட்டுக்குடும்ப பங்குரியரின் அனுமதி மற்றும் ஒப்புதல் இன்றி ஏற்பட்டது.

வாதிகளின் குடும்பத்தில் எருமை மாடுகள் 7–ம், மதிப்பு ரூ.50,000/–, வெள்ளாடுகள் 3 மதிப்பு ரூ.14,000/–மும், வெள்ளாட்டு கடா 4 மதிப்பு ரூ.10,000/–ம் உள்ளது. அதோடு குடும்பத்தில் 45–பவுன் நகையும் மற்றும் வீட்டு உபயோக பாத்திரங்கள் மதிப்பு ரூ.50,000/–ம் உள்ளன. இவைகளிலும் வாதிகளுக்குள்ள பாகத்தினை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் அவற்றை விற்று அப்புறப்படுத்த 1, 2 பிரதிவாதிகள் கடந்த 26–04–2007–ம் தேதி முதல் முயற்சித்து வருகிறார்கள். அவ்வாறு விட்டுவிட்டால் வாதிகளுக்கு பெருத்த நட்டமும், ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்பட்டுவிடும்.

தாவா சொத்துக்களில் வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்தபோதிலும், மேற்படி சொத்துக்களில் கரும்பு பயிர் செய்யப்பட்டிருந்து, மேற்படி கரும்பினை 1–வது பிரதிவாதியின் பெயரில், 10–வது பிரதிவாதியின் ஆலைக்கு பாத்தியப்பட்டு, ஆலைக்கு வெட்டி கொடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி கரும்பிற்குரிய விலையினை 10–வது பிரதிவாதி, 11–வது பிரதிவாதியின் வங்கியின்மூலம் தொகை பெறப்பட்டு வந்து, தற்பொழுது பயிரிடப்பட்டுள்ள கரும்பும், 1–வது பிரதிவாதி பெயரிலேயே பதிவாகியுள்ளதால் அதிலும் வாதிகளுக்கு 1/3–பாக உரிமையுள்ளது. ஆனால் 1–வது பிரதிவாதி,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:12 +0530

தான் பெற்று அதில் வாதிகளுக்குரிய பாகத்திணையும் ஏமாற்றப் போவதாக கூறிவருகிறார்கள். ஆகையால், மேற்படி தொகையினை, 1–வது பிரதிவாதிக்கு வழங்கக்கூடாதெனவும் இந்த வழக்கில் மனுதாக்கல் செய்யவேண்டியது அவசியமாகிறது. இந்த நிலையில் தாவாச்சொத்துகளில் வாதிகளுக்குரிய 1/3 பாகத்தினை பிரித்து தரவேண்டுமென கடந்த 26–04–2007–ம் தேதியன்று கேட்டபோதும், வாதிகளை 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் அடித்து, உதைத்துவிட்டனர். அதோடு எல்லா தாவா சொத்துக்கள் சம்பந்தமாகவும், பொய்யான ஆவணங்களை 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்தப் போவதாகவும் கூறிவருகிறார்கள், ஆனால் 1, 2 பிரதிவாதிகள் அவ்வாறு செய்வதற்கு எந்தவித உரிமையும் கிடையாது. அவ்வாறு ஏற்படுத்தினாலும் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல, எப்படியாவது வாதிகளின் பாக உரிமையை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வாறு செய்து வருகிறார்கள். ஆகையால் வாதிகள் தங்களுக்குரிய 1/3–பாகத்தினை விளம்புகை செய்திடவும், அதனை தொடர்ந்து நள இலப்பம் சரிகட்டி பாகம் பிரித்திடவும், அதோடு. 1 முதல் 9 பிரதிவாதிகள் தாவாச்சொத்துக்களில் விற்கிரையமோ வில்லங்கமோ ஏற்படுத்தக்கூடாதெனவும், தாவாச்சொத்துக்களில் வாதிகள் 1, 2 பிரதிவாதிகளுடன் கூட்டு அனுபவம் செய்வதை எந்தவித இடைஞ்சலும் செய்யக் கூடாதெனவும் ஒரு தற்கால உறுத்துக்கட்டளை வேண்டி வாதிகள் தரப்பில் வழக்கு.

3. 1 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3, 4, 7, 8 மற்றும் 9 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:

தாவா சொத்துக்கள் முழுமைக்கும் பெரியவர் கண்ணுசாமிக்கு பாத்தியப்பட்டது அல்ல. அவைகள் அளவிற் சிறிய மேட்டுக் காடுகள், அதில் வருமானம் எதுவும் மிச்சம் இல்லை. 1 –ம் பிரதிவாதி மற்றும் அவர் அண்ணன் சகோதரர்கள் ஆகியோரின் மனைவியின் வீட்டில் கொடுக்கப்பட்ட ஆடுகள்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:35:18 +0530

மாடுகள் மற்றும் தரகு தொழில் இவற்றின் மூலம் கிடைத்த வருமானத்தில், தாவா சொத்துக்களின் பெரும் பகுதியை அண்ணன் சதாசிவம் பெயரில் கிரையம் பெற்று, 1ஆம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றச் சொத்துக்களை ஆளுக்கு தலா பாதி பங்கை வாய்க்கராராக பாகம் பிரித்து அனுபவித்து, அவைகள் தனிப்பட்டா ஆகவும் சில இனங்களில் கூட்டுப் பட்டாவாகவும் சதாசிவம் மற்றும் 1–ம் பிரதிவாதி பெயரில் கூட்டாக உள்ளன.

தாவா சொத்துக்களில் பல அவரின் மகன்களான 1–ம் பிரதிவாதி மற்றும் அவர் அண்ணன் சதாசிவம் என்ற நபர்களுக்கு அவர்கள் தனிப்பட்டு தொழிலில் கிடைத்த வருமானத்தால் வாங்கப்பட்டவை. வழக்கு சொத்துக்கள் முழுமைக்கும் கூட்டு குடும்பச் சொத்துக்கள் இல்லை. பரம்பரைச் சொத்து பாகம் என்பது வேறு. 3, 4, பிரதிவாதிகளுக்கு எந்தவித சீர் வரிசையும் செய்யவில்லை. அதனால் எந்தவித பங்கும் கிடையாது என்று சட்டம் 1988–ன் படி அவர்கட்கு பரம்பரை தாவா சொத்துக்களில் கூட்டுரிமையாளர் என்ற முறையில் பங்கு உண்டு. தாவா சொத்துக்கள் முழுவதும் பரம்பரைச் சொத்துக்கள் அல்ல 15, 16, 18, 19, 20 இனச்சொத்துக்கள் பரம்பரைச் சொத்துக்கள் 23, 24, இனச்சொத்துக்கள் இரண்டும் ஒரே சொத்தைக் குறிப்பவை. அதில் 9–ம் பிரதிவாதியின் மகளான 3–ம் பிரதிவாதி ரெங்கநாயகியின் மக்களுக்கு கார்டியனாக இருந்து, தன் மருமகனாகிய 7, 8, இளவர்களின் தந்தை ராமகிருஷ்ணன் கொடுத்த பணத்தின்மூலம் கிரையம் பெற்றார். அது ஒருகாலத்திலும் பரம்பரைச்சொத்து அல்ல. மேற்படி 1 –ம் வாதியின் கணவர் இறந்துவிட்டதால் அவரின் அன்னை 9–ம் பிரதிவாதிக்கு பரம்பரைச் சொத்துக்களில் உரிமை உண்டு. அதனால் அவருக்கு பங்கு போட்டு இருக்காமல் அவரைக் கழித்து 1/3 பங்கு கோர வாதிகளால் முடியாது.

ஆகவே 1 முதல் 17 மற்றும் 21, 22 இனங்கள் 1–ம் பிரதிவாதியாலும், அவர் அண்ணன் சதாசிவத்தாலும் தங்களின் சொந்த தொழில் வருமானத்தினால் கிரையம் பெறப்பட்டவைகள். இதில் 3, 17 இனங்கள் ஒரே நிலமாகும். மேலும்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:24 +0530

20 இனமனை 9–ம் பிரதிவாதியால் தன் தாய் வீட்டு சீதனப்பொருட்களின் மூலம் கிடைத்த வருமானத்தால் வாங்கப்பட்டது. 23, 24 இரண்டும் ஒரே மனையைக் குறிக்கிறது. இது இளவர்கள் 5, 6 நபர்களின் தந்தை ராமகிருஷ்ணன் என்பவர் தன் முதல் தாரத்தால் ஏதாவது பிரச்சனை ஏற்படும் என்பதால், தன் இரண்டாம் தாரத்தின் தாயும் தன் மாமியாருமான 9–ம் பிரதிவாதியைக் கார்டியனாக காட்டி 13.03.2002–ம் ஆண்டு கிரையம் பெற்றார். கார்டியனாக பெற்ற கிரையத்தைக் கூட வாதிகள் பேராசை காரணமாக மோசடியாக அபகரிக்க கூட்டு குடும்பச் சொத்து என்று கூறியுள்ளனர். 1 முதல் 17, 21, 22 சொத்துக்கள் 1–ம் பிரதிவாதி மற்றும் அவர் அண்ணன் சதாசிவத்திற்கு பாத்தியப்பட்டதால், அந்த சொத்துக்கள் எந்தவிதத்திலும் பரம்பரைச் சொத்துக்கள் அல்ல என்பதால், வாதிகளுக்கு எள்ளளவும் பங்கு இல்லை. மேலும் 1–ம் வாதியின் கணவனும் மற்றும் 2, 3 வாதிகளின் தந்தையுமான கண்ணுசாமி எந்த வித வேலைக்கும் செல்லாமல் எந்தவித வருமானமுமின்றி 1–ம் பிரதிவாதியின் அனுசரிப்பில் இருந்தார். அவருக்கு திருமணம் செய்து அவர் பெயர் சொல்லாத வியாதியினால் பீடிக்கப்பட்டு அவருக்கு மருத்துவ சிகிச்சைக்காக, 1, 2 பிரதிவாதிகள் தங்களின் சொந்த உழைப்பு வருமானத்தாலும், கடன் மூலமும் 15 லட்சத்திற்கு மேல் செலவழித்துள்ளனர். இருந்தாலும் வியாதியின் தன்மையினால் கண்ணுசாமி இறந்துவிட்டார். அவர் மரணத்திற்கு ஈமச்சடங்கு செலவுகளை 2–ம் பிரதிவாதி தான் தன் செலவில் தமயன் என்ற முறையில் பார்த்தும், 2–ம் வாதிக்கு சீர்வரிசை 5 பவுன் நகை பணத்துடன் திருமணம் செய்து கொடுத்துள்ளார். கண்ணுசாமிக்கு மருத்துவ செலவு செய்யப்பட்டதாலும் வாதிகளே தங்களுக்கு பரம்பரைச் சொத்துக்களில் பங்கு எதுவும் வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். அதனால் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தவித உரிமையும், பங்கும் இல்லை.

சட்டப்படியே ஒரு விவாதத்திற்காக என பரம்பரைச் சொத்துக்களில் வாதிகளுக்கு பங்கு இருப்பதாக கொண்டாலும் அவர்களுக்கு ஆளுக்கு தலா

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:35:29 +0530

1/20 பங்கு மட்டுமே கிடைக்கும். அதாவது 1-ம் பிரதிவாதிக்கு 4/20 2-ம் பிரதிவாதி மற்றும் 5, 6 பிரதிவாதி வகையறாவிற்கு 4/20, 3-ம் பிரதிவாதி ரெங்கநாயகிக்கு 4/20, 4-ம் பிரதிவாதி மணிமேகலைக்கு 4/20, 9-ம் பிரதிவாதிக்கு 1/20 பங்கும் உண்டு. 12.04.2007-ல் 1-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் 8, 9, 10 இனங்களை தன் மகள்கள் 3, 4 பிரதிவாதிகளுக்கும், 2-ம் பிரதவாதியின் மக்கள்கள் 5, 6 பிரதிவாதிகளுக்கு 1, 2, 3, 4, 5, 6 ஆகிய இனங்களையும் தானசாசனம் செய்து விட்டார். அவர்கள் அந்த தானசாசனங்களை ஒத்துக் கொண்டு சொத்துக்களை அனுபவித்து உரிமையாளர்களாக அனுபவித்து வருகின்றனர். அரசும் அவர்கள் பெயரில் தனி பட்டா வழங்கியுள்ளது.

2-ம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்து வந்ததினால் வீட்டு உபயோக பொருள்கள் உள்ளது. 2-ம் பிரதிவாதி மனைவியின் தாய் வீட்டில் அவருக்கு திருமணத்தின் போது சீர்வரிசையில் போட்ட நகைகள் உள்ளன. அதையும் வாதிகள் மோசடியாகக் கூட்டுக் குடும்பச் சொத்து என்று மோசடியாக வர்ணித்துள்ளார். 2-ம் இன புல எண். அரசு அமைத்துள்ள ரோடு . 4-ம் இன நிலத்தில் 1-ம் பிரதிவாதி புதிதாக கிணறு வெட்டினார். பின் 2-ம் பிரதிவாதி அயல்நாட்டு பணத்தைக் கொண்டு கிணற்றை நன்கு ஆழப்படுத்தி அதில் நீர்மூழ்கி மின்மோட்டார் போட்டுள்ளார். 1-ம் பிரதிவாதி அதிலிருந்து நீர் எடுத்து, பெரம்பலூர் சர்க்கரை ஆலை மூலம் ஸ்டேட் வங்கியில் (1 ஏக்கர் கரும்பிற்கு ரூ 15,000/-) கடன் பெற்று அதில் கரும்பு பயிரிட்டு உள்ளார். அதற்கு வாதிகள் எந்தவித பொருள் உதவியும் செய்யவில்லை. அதனால் அவர்கட்கு எந்த உரிமையும் இல்லை. அந்தக் கரும்பு வெட்டப்பட்டு அடுத்த கரும்பும் கடன்பெற்று பயிரிடப்பட்டது. அந்த பணமும் பதிய கரும்பு வெட்டு பணமும் இன்னும் வங்கியில் உள்ளது. கடனும் அடையவில்லை. அந்த கரும்பு பணம் 1-ம் பிரதிவாதிக்கு சேரவேண்டியது. அவருக்கு பாத்தியப்பட்டது. வழக்கில் எதிர்கால வருமானத்திற்கு வழக்கிட்டுள்ள வாதிகள் கரும்பு பணத்தை ரிலீஸ்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:35 +0530

செய்வதைத் தடுக்க அவர்கள் எந்தவித உரிமையும் இல்லை. வாதிகள் உபய வாதிகளுடன் கூட்டு அனுபோகத்தில் இல்லை. ஆகவே அவர்கள் தடையாணை பரிகாரம் கேட்க முடியாது. கூட்டு குடும்ப பாகம் பிரிப்பு வழக்குகளில் கூட்டு உரிமைளார்கட்கு எதிராக எந்தவித தடையாணை பரிகாரமும் கேட்க முடியாது. ஏனெனில் சொத்துக்கள் அழிக்கப்படவோ, மாற்றப்படவோ இல்லை. சொத்துக்களின் மதிப்பைக் குறைக்கும் எந்தவித செயல்களையும் பிரதிவாதிகள் செய்யவில்லை, தாவா சொத்துவிபரம், வியாஜ்ஜியமும் மறுக்கப்படுகின்றன. வாதிகள் தாவா சொத்தில் கூட்டு அனுபோகத்தில் இல்லை. ஆகவே வாதிகள் இவ்வழக்கை 37(2)–ன் மதிப்பிட்டு இருப்பது தவறு. தாவா சொத்துகள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்பதை காட்ட வாதிகள் எந்தவித ஆவணங்களையும் தாக்கல் செய்யாததிலிருந்தே வாதிகளுக்கு எந்த உரிமையும் தாவா சொத்தைப் பொறுத்து கிடையாது. முதல் இனச்சொத்து 1980–லும் 4–ம் இன சொத்து 09.06.1982–லும், 5 ஆம் இனச்சொத்து 21.12.1963–லும், 6–ம் இனச்சொத்து 20.04.1971–லும் 1–ஆம் பிரதிவாதியும் அவர் அண்ணன் சதாசிவமும் கூட்டாக கிரையம் பெற்றவை. எனவே வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3, 4, 7, 8 மற்றும் 9 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

எந்த சொத்துக்கள் பூர்வீகம், எந்த சொத்துக்கள் கிரையம் பெற்றது என்ப–தை தெரியாமலேயே வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 1ஆம் பிரதி–வாதி வாக்குமூலத்தைகேட்ட பின்னர் 7 இனச்சொத்துக்கள் புதிதாக சேர்க்க தி–ருத்தல் மனுவை தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் வேண்டுமென்றே வழக்கை மோசடி ஆதாயம் பெற தாக்கல் செய்துவிட்டு, புதிதாகசொத்துக்களை சேர்க்க மனு கொடுத்துள்ளனர். சேர்க்கப்பட கொடுத்த மனுச் சொத்துக்கள் 25 முதல் 29, 31 இனச்சொத்துக்கள் எழுமூர் கிழக்கிலும், 30ம் இனச் சொத்து எழுமூர் மேற்கி–

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:39 +0530

லும் உள்ளது. ஆனால் அனைத்து சொத்துக்களும் எழுமூர் கிழக்கு என்று காட்டியுள்ளனர். 27வது இனமாக காட்டப்பட்ட 84/6சி 1ம் வாதியின் தனிப்பட்டா 224ல் உள்ளது. ஆனால், 28, 29, 30 இனச்சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிக்கும், அவர் அண்ணன் சாதாசிவத்திற்கும் கூட்டுப்பட்டாவாக பட்டா எண்.1222ல் உள்ளது. அவைகளில் முழுபங்கும் கோரி வாதிகள் மனு செய்துள்ளது தவறு. அந்த நம்பர்களில் பாதிதான் 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியம். அந்த சொத்துக்க–ளுக்கு நான்கெல்லையும், விஸ்தீரணமும் காட்டவில்லை. மேலும் கூட்டுப்பட்–டா எண்கள் 1058 மற்றும் 1198 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் சேர்க்கப்பட–வில்லை. வாதிகள் பி.வா.சா.ஆ.15ல் பட்டா புத்தகத்தில் உள்ள அனைத்து சொத்துக்களையும் தெரிந்தும், வேண்டுமென்றே சேர்க்கவில்லை. எனவே, வா–திகளின் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5. இருமேல்முறையீடுகளின் தீர்வின் வசதிக்காக தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டது போல் இம்மேல்முறையீடுகளிலும் அழைக்கப்–படுகிறார்கள்.

6. இவ்வழக்கில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையில் அடிப்டையில் 7 எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் 2 விசா–ரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்–பட்டன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 முதல் 5 வரை விசாரிக்கப்பட்டு, பிசா.ஆ.1 முதல் 39 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. விசாரணை முடிவில் விசாரணை நீதிமன்றம், வாதிகளின் வழக்–கை பகுதியாக அனுமதித்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மேற்படி

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:46 +0530

தீர்வில் குறைவுற்ற வாதிகளால் இந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. <u>மேல்முறையீட்டாளர் வழக்கு எண்.5/2023 தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம்</u>:–

**1.** கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்புரை சட்டத்திற்கும், சாட்சிகளின் சாட்சியங்களுக்கும் மற்றும் வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் எதிரானது.

**2.** கீழமை நீதிமன்றம் தாவா அ மற்றும் ஆ அட்டவணைச் சொத்துக்கள் உள்பட அனைத்து வழக்குச் சொத்துக்களிலும் வாதிகளுக்கு **1/3** பங்கு பாத்தியம் என்று தீர்ப்பளித்திருக்க வேண்டும்.

**3.** கீழமை நீதிமன்றம் அ அட்டவணைச் சொத்துக்கள் கூட்டுக் குடும்ப பூர்வீகச் சொத்துக்கள் என்று தீர்ப்பளித்திருந்த போதிலும், தாவா ஆ அட்டவணைச் சொத்துக்கள் குடும்பச் சொத்துக்களில் ஒரு பகுதியாகும்.

**4.** கீழமை நீதிமன்றம் கணக்கிட்டுள்ள பாகவிகிதம் இந்து சட்டப்படி சரியல்ல.

**5. 1** ஆம் பிரதிவாதியின் மகளுக்கு இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டத்திற்கு முன்னரே திருமணம் செய்யப்பட்டுள்ளது என்பதை கீழமை நீதிமன்றம் கவனத்தில்கொள்ளவில்லை. எனவே, கூட்டுக் குடும்பச் சொத்துக்களில் அவருக்கு எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல.

**6.** வாதிகள் கூட்டுக் குடும்பத்தின் கூட்டுரிமையாளர்கள், எனவே, கூட்டுக் குடும்பச் சொத்துக்களில் பாகம் பிரிவினை **2** மற்றும் **3** வாதிகளின் தந்தைக்கு பாத்தியப்பட்டச் சொத்துக்கள் **9** ஆம் பிரதிவாதி மற்றும் வாதிகளுக்கு சேரும் என்று கணக்கிட்டுள்ளது தவறானது. **2** மற்றும் **3** பிரதிவாதிகளுக்கும் அவர்களது தந்தைக்குமிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதாகவும், அந்த பாகப்பிரிவினையில் கண்ணுசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மட்டுமே

PADMANABAN VENKATASAMY Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:35:50 +0530

கண்ணுசாமியின் வாரிசுகளுக்கிடையே பாகம் பிரிக்கப்பட வேண்டும் என்று கீழமை நீதிமன்றம் கண்டிருக்கவேண்டும், எனவே, கீழமை நீதிமன்றம் கணக்கிட்டுள்ள பாகவிகிதம் சரியல்ல.

தாவாச் சொத்துக்களில் சேர்க்கப்படாத, அனைத்துக் குடும்பச் சொத்துக்களுக்கும் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக்க வேண்டும். பிரதிவாதிகள் தரப்பில் கூட்டுக் குடும்பச் சொத்துக்களில் சில சொத்துக்கள் அதாவது புல எண்கள்.85/4, 87/8, 87/4, 86/6, 53/12, 31/5a, 31/5b, 31/5A மற்றும் 38/8 தனிப்பட்ட உடைமையிலும், அனுபவத்திலும் இருப்பதாக சொல்லியிருந்தாலும், மேற்படி சொத்துக்களையும் உள்ளடக்கி கீழமை நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

9. மேல்முறையீட்டாளர் வழக்கு எண்.5/2023 தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம்:–

1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 1 ஆம் மேல்முறையீட்டாளரின் மாமனாரும், 2 மற்றும் 3 மேல்முறையீட்டாளர்களின் தாத்தாவும் ஆவார். 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் கடந்த 24.04.2024 அன்று எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால், தாவாச் சொத்துக்களிலுள்ள அவரது பாகம், வாரிசுரிமைப்படி மேல்முறையீட்டாளர்களுக்கும், 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கும் பாத்தியம்.

சில சொத்துக்கள் 1 ஆம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்று வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும், இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8–ன் கீழ் இந்த மேல்முறையீட்டாளர்களுக்கும், 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கும் பாத்தியம். எனவே, தாவாச் சொத்துக்களில் மேல்முறையீட்டாளர்களுக்கு ½ பாகம் பாத்தியம். மேலும், 3 மற்றும் 4 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு தாவாச் சொத்துக்களில் பாகம் உண்டு என்று நீதிமன்றம் முடிவுக்கு வருமேயானால்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:35:54 +0530

மேல்முறையீட்டாளர்களுக்கு தாவாச் சொத்துக்களில் ¼ பாகம் பாத்தியம். எனவே, கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

10. விசாரணை முடிவில் விசாரணை நீதிமன்றம், வாதிகளின் வழக்கை பகுதியாக அனுமதித்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மேற்படி தீர்வில் குறைவுற்ற பிரதிவாதிகளால் இந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. <u>மேல்முறையீட்டாளர் வழக்கு எண்.5/2024 தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம்:-</u>

இறந்துபோன 12 ஆம் பிரதிவாதியின் மகன்கள் மட்டுமே வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர், அவரது மனைவி மற்றும் மகள் சேர்க்கப்படாததால், உரிய தரப்பினர்களை சேர்க்காத குறைக்கு தாவா உட்பட்டுள்ளது. பூர்வீகச் சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து சொத்துக்கள் வாங்கப்பட்டதாக கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லை.

தாவாச் சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் அல்ல. தாவா 15, 16, 18, 19 மற்றும் 22 அயிட்டச் சொத்துக்கள் 1 ஆம் பிரதிவாதியின் தாத்தா அண்ணாமலையிடமிருந்து 1 ஆம் பிரதிவாதியின் தந்தைக்கு கிடைக்கப் பெற்ற சொத்துக்கள்.

9 ஆம் பிரதிவாதி தன்னை கார்டியனாக நியமித்து 7 மற்றும் 8 இளவர் பிரதிவாதிகள் பெயர்களில் தாவா 23 மற்றும் 24 அயிட்டச் சொத்துக்கள் எழுதி வைத்துள்ளார். வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக விகிதமும், தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள பாகவிகிதமும் தவறு.

2 ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் சம்பாதித்து அனுப்பிய பணத்தை கொண்டும் 1 ஆம் பிரதிவாதியால் தாவாச் சொத்தில் கிணறு வெட்டப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:36:00 +0530

பெறப்பட்ட கடன் வழக்கு தேதிவரை அடைபடவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேற்கொள்களை கீழமை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது.

இந்திய சாட்சிய சட்டத்தின்படி பழைய ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகளை மறுப்பது என்பது அந்த ஆவணங்களை சமர்ப்பிப்பதே, அந்த ஆவணங்கள் நிரூபிக்கப்பட்டுவிட்டதாகவே கருத வேண்டும் என்பதே அனுமானம். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கிரையப் பத்திரங்கள் மற்றும் தானப் பத்திரங்கள், அவை **1956** ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. எனவே, மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபித்துள்ளதாக கருதி, கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, மேல்முறையீடு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>12. மேல்முறையீட்டு வழக்கு எண் 5/2023–ல் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்–சனைகள்:–</u>

1. வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/28 பாகம் கிடைக்கத்தக்கது என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ளது சரியானதா?

2. தாவா சொத்தில் பி அட்டவணை சொத்துக்குறித்து தள்ளுபடி செய்யப்–பட்டது சரியானதா?

3. வாதிகளுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய பாகம் எவ்வளவு?

<u>13. மேல்முறையீட்டு வழக்கு எண் 5/2024–ல் தீர்மானிக்கப்படவேண்டிய பி–ரச்சனைகள்:–</u>

4. தாவா 15, 16, 18, 19 மற்றும் 22 இலக்கச் சொத்துக்களைத் தவிர மற்ற சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களா?

5. இம்மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா?

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:05 +0530

14. பிரச்சனை எண்கள் 1 முதல் 4 :

1ஆம் வாதியின் மாமனார் 1ஆம் பிரதிவாதி என்பதும், 2 மற்றும் 3 வாதிகள் 1ஆம் வாதியின் மகள்கள் என்பதும், 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 1ஆம் வாதியின் கணவரான இறந்துபோன கண்ணுசாமியும், 1ஆம் பிரதிவாதியின் மகன்கள் மற்றும் மகள்கள் என்பதும், இளவர் பிரதிவாதிகள் 5 மற்றும் 6 ஆகியோர்கள் 2ஆம் பிரதிவாதியின் மகன்கள் என்பதும், இளவர் பிரதிவாதிகள் 7 மற்றும் 8 ஆகியோர் 4ஆம் பிரதிவாதியின் மகன்கள் என்பதும், 9ஆம் பிரதிவாதி, 1ஆம் பிரதிவாதியின் மனைவி என்பதும், 12ஆம் பிரதிவாதி, 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் என்பதும், 12ஆம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசுகளாக மகன்கள் 13 மற்றும் 14 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதும், இவ்வழக்கின் சங்கதிகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளது. தாவா 15, 16, 18, 19 மற்றும் 22 இலக்க சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதும் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது. மேலும் தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரரான 12ஆம் பிரதிவாதியான சதாசிவம் பெயரில் கிரையப்பத்திரம் ஏற்பட்டுள்ளது என்பதும் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது.

15. வாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதிலும், 1ஆம் வாதியான வா.சா.1ன் பிரமாண வாக்குமூலத்திலும், தாவா சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களும் 1ஆம் பிரதிவாதிக்கும் மற்றும் அவரது சகோதரரான சதாசிவம் ஆகியோர் உள்ளடங்கிய இந்து கூட்டுக் குடும்பத்திற்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றும், 1ஆம் பிரதிவாதியின் தகப்பனார் கண்ணுசாமி இறந்தவுடன், அவருடைய சகோதரரான 12ஆம் பிரதிவாதியுடன், 1ஆம் பிரதிவாதியும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவம் செய்து வந்ததாகவும், அந்த அடிப்படையில், தாவா சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதியின் பாகத்திற்கு

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:11 +0530

கிடைத்த கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும், சில சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு மூத்த குடும்ப உறுப்பினர் என்ற முறையிலும், குடும்ப கர்த்தா என்ற முறையிலும் 1ஆம் பிரதிவாதியின் பெயரில் ஆதியில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்பதும், அதேபோன்று, இளவர்கள் பெயரிலும் வாங்கப்பட்டுள்ளது என்றும், வாதிகளுக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்று வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதிலும், வா.சா.1ம் குறிப்பாகவும், தெளிவாகவும் சாட்சியம் அளித்துள்ளார். வாசா.1ன் சாட்சியத்தை முற்றிலும் நிராகரிக்கும் அளவிற்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித அடித்தளமும் உருவாக்கப்படவில்லை.

16. பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பாக வாதிகள் கூறியுள்ளது போன்று 15, 16, 18, 19 மற்றும் 22 இன சொத்துக்களைத் தவிர இதர சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்றும், 1ஆம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரரான சதாசிவம் ஆகியோர்களுக்கு திருமணமாகி அவர்களுடைய மனைவிகள் கொண்டு வந்த சீர்வரிசையான ஆடுகள், மாடுகள் மற்றும் தரகு தொழில் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு, 1ஆம் பிரதிவாதியும், அவருடைய சகோதரர் பெயரிலும் தாவா சொத்துக்களில் பல கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்ததாகவும் கூறியுள்ளார்கள். ஒருகால், வாதத்திற்கு வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் இருப்பதாக ஒப்புக்கொண்டாலும், வாதிகளுக்கு 1/20ம், 1ஆம் பிரதிவாதிக்கு, 4/20ம், 2ஆம் பிரதிவாதி மற்றும் 5ஆம் பிரதிவாதியின் வகையாறாவிற்கு 4/20ம், 3 மற்றும் 4ஆம் பிரதிவாதிகளுக்கு தலா 4/20ம், 9ஆம் பிரதிவாதிக்கு 1/20 பங்கு மட்டுமே உள்ளது என்றும், 1ஆம் பிரதிவாதி அவருடைய மகள்களான 3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகளுக்கு தாவா 8 முதல் 10 இலக்கச் சொத்துக்களை தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், அதேபோன்று, 5, 6 இளவர் பிரதிவாதிகளான 2ஆம் பிரதிவாதியின் மகன்களுக்கு தாவா 1 முதல் 6 இலக்கச்

PADMANABAN
VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur,
Date: 2026.04.06 19:36:15 +0530

சொத்துக்களை தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றும், பிராதில் குறிப்பிட்டுள்ள பி இலக்க அட்டவணைச் சொத்துக்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதும், தாவா 1, 4, 5 மற்றும் 6 ஆகிய இலக்க சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரர் சதாசிவம் பெயரில் கூட்டாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார்கள்.

17. வா.சா.2 ஆக இவ்வழக்கில் இறந்துபோன 12ஆம் பிரதிவாதியின் மகனான 13ஆம் பிரதிவாதி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி 12ஆம் பிரதிவாதி, 1ஆம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் என்றும், 12ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கிய சொத்துக்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தபோது வாங்கிய சொத்துக்கள் என்றும், அவர் குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் வாங்கப்பட்டது என்று வாதிகள் தரப்பில் குறிப்பாக கட்சி செய்யப்பட்டுள்ளது. 12ஆம் பிரதிவாதியான, 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் இறந்துபோன சதாசிவம் இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் பெயரிலும், 1ஆம் பிரதிவாதியின் பெயரிலும் சேர்ந்து வாங்கிய சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் தான் என்றும், பொது குடும்ப சொத்து இல்லை என்று அவர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்படவில்லை. 12ஆம் பிரதிவாதியின் மகன்களாக 13 மற்றும் 14வது பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், குடும்பத்தின் சூழ்நிலை மற்றும் சொத்துக்களின் நிலை குறித்தும், தன்மை மற்றும் அனுபவம் குறித்தும் சாட்சியம் அளிக்க தகுதியான நபராக 1ஆம் பிரதிவாதியின் சகோதரரின் மகன் உள்ள நிலையில், அவர் வா.சா.2ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தில், வாதிகள் தரப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல் அவருடைய தகப்பனாரான சதாசிவம் பெயரிலும், 1ஆம் பிரதிவாதியின் பெயரிலும் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் பொது குடும்பச் சொத்துக்கள் என்றும், குடும்பத்தின் மூத்தவர் என்ற பெயரில் அவருடைய

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:36:19 +0530

தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று குறிப்பாகவும், தெளிவாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே இவ்வழக்கின் சாட்சியங்களில், வாசா.2ன் சாட்சியமானது வா.சா.1ன் சாட்சியத்தை மேலும் உறுதியூட்டம் செய்வதாகவே உள்ளது.

18. பிரதிவாதிகள் தரப்பில் 1, 2, 4, 9 பிரதிவாதிகள் முறையே பி.சா.1 முதல் 3 மற்றும் பிசா.5ஆகவும், 3ஆம் பிரதிவாதியின் கணவர் ராமகிருஷ்ணன் என்பவர் பி.சா.4ஆகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். வழக்கு விசாரணையின் போது, பிரதிவாதிகள் தரப்பில், முதல் விசாரணையில், எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை கூறியிருந்தாலும், கூட்டாக கிரையம் பெற்ற கிரையப் பத்திரங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களைத் தாக்கல் செய்திருந்தாலும், மேற்படி சாட்சிகள் அவர்களுடைய குறுக்குவிசாரணையின்போது, தாவா சொத்துக்களின் தன்மை, நிலைமை குறித்தும், கிரையம் வாங்கப்பட்ட விதம் குறித்தும் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்கள். 1ஆம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில்,

> " வாதி நல்லம்மாளின் கணவர் என் மகன். 2, 3 வாதிகள் என் பேரப்பிள்ளைகள். எனது மகன் கண்ணுசாமி 20 வருடங்களுக்கு முன்பாக இறந்துபோனார். 2007ஆம் வருடம் வரை வாதியும், அவர் குழந்தைகளும் நாங்களும் ஒரே குடும்பமாக தான் வசித்து வந்தோம். நானும் எனது அண்ணனும் கிரயம் வாங்கிய சொத்துக்கள் கூட்டுக்குடும்பமாக இருந்த காலத்தில் தான். என் அண்ணன் சதாசிவம் தான் குடும்பத்தில் மூத்தவர். என் அண்ணன் தான் கூட்டுக்குடும்பத்தை நிர்வகித்து வந்தார். கூட்டுக்குடும்ப தலைவர் என்ற நிலையில்தான் அவர் பெயரில் அந்த சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:36:23 +0530

அதன்பின்னர் நானும், எனது அண்ணனும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம். நாங்கள் கடன் வாங்கி சொத்துக்கள் வாங்கவில்லை. எனக்கும் எனது அண்ணனுக்கும் வயலும் காடுகளும் பூர்வீகமாக இருந்தது. வரவு செலவு என் அண்ணன் பார்த்து வந்தார். பூர்வீக சொத்து வருமானத்தை தவிர கூட்டு குடும்ப வருமானத்தை தவிர எனக்கு வேறு எந்த வருமானமும் இல்லை. நான் வேறு தொழில் எதுவும் செய்து சம்பாதிக்கவில்லை. எனக்கு விவசாயத் தொழில், மாடு மேய்க்கும் நாங்கள் வேலைசெய்யும் தொழில் தவிர வேறு எந்த வேலையும் தெரியாது. வாதி என்னுடன் இருந்தபோது எல்லோரும் சேர்ந்து தான் எல்லா சொத்துக்களையும் அனுபவித்து வந்தோம்" என்று கூறியுள்ளார்.

அதேபோன்று 2ஆம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில்,

" என் அண்ணன் இறந்து 19 வருடங்கள் ஆகிறது. எனது அண்ணார் 1வது வாதியின் கணவர் இறந்த பின்பும், வாதிகளும், நானும் ஒரே குடும்பமாக வாழ்ந்து ஒரே பானையில் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாதிகள் காட்டு வேலைக்கு செல்ல மாட்டார்கள். காட்டுக்குபோய் வேலை செய்வார்கள் என்று சொன்னால் சரியல்ல. வீட்டு வேலைதான் செய்வார்கள். எல்லா காடுகளிலும் விளையக்கூடிய தானியங்கள் அனைத்தும் வீட்டில் ஒரே இடத்தில் தான் இருக்கும், தனித்தனியாக வைப்பதில்லை" என்று கூறியுள்ளார்.

மேலும் 4ஆம் பிரதிவாதியான பி.சா.3 தனது குறுக்கு விசாரணையில்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:29 +0530

" என் அண்ணன் இறந்த பிறகும் வாதி நல்லம்மாளும், என் தந்தையும் ஒரே குடும்பமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். நல்லம்மாள் என் தந்தையோடு உடன் இருந்தபோது காட்டிற்கு வேலைக்கு போகும். நல்லம்மாள் வேலைக்கு போனபோது அந்த வருமானத்தை எல்லாம் ஒன்றாகத்தான் போட்டார்கள். என் அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் இடையில் பாகம் பிரித்துக்கொண்டார்கள். என் அப்பாவும், பெரியப்பாவும் கூட்டுக் குடும்பமாக இருந்பொழுதுதான் அந்த சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது. வாதி நல்லம்மாள் கூட்டு குடும்பமாக இருந்து வாதியும், 4 வருடத்திற்கு முன்பாக பிரிந்து சென்றுவிட்டார்" என்று கூறியுள்ளார்.

1ஆம் பிரதிவாதியின் மனைவியான 9ஆம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில்,

" சூரியகாந்தியின் திருமணத்திற்கு முன்பாக நானும், எனது கணவரும் வாதிகளும் குடும்ப சொத்துக்களை ஏகமான அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனது கணவரும் அவருடைய அண்ணனும் பாகம் பிரியாமல் இருக்கும்வரை சதாசிவம்தான் சொத்துக்களை பார்த்துவந்தார். அதனால் குடும்பத்தில் வந்த வருமானத்தை வைத்து சதாசிவம் பேரில் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் தம்பி பெயரில் பாகம் பிரிக்க முடியாது என்பதால் அண்ணன் பேரில் எழுதப்பட்டது.ரமேஷ், ராமராஜன் என்பவர் எனது மகள் வீட்டு பேரன்கள். ரமேஷ் என்பவர் ரெங்கநாயகி மகன்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.06 19:36:32 +0530

ராமராஜன் என்பவரும் ரெங்கநாயகி மகன்தான் . ரமேஷ், ராமராஜன் என்பவர் பெயரில் நாங்கள் சொத்து எதுவும் எழுதிவைக்கவில்லை. என்னுடைய மகள் வீட்டு பேரன்களுக்காக நான் என்னுடைய சொந்த காசை வைத்து எந்த சொத்தும் வாங்கவில்லை" என்று கூறியுள்ளார்.

3ஆம் பிரதிவாதியின் கணவர் பி.சா.4 தனது குறுக்கு விசாரணையில்,

" நான் சொல்வது தவறு என்றும், அழகம்மாள் (பி.சா.5) அந்த கிரைய தொகையை கொடுத்தார் என்று சொன்னால் சரி. அந்த தொகை அழகம்மாளுக்கு கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் தான் என்று சொன்னால் சரியல்ல" என்று கூறியுள்ளார்.

பி.சா.1 முதல் 5 சாட்சிகள் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிகள் தரப்பில் குறிப்பிட்டுள்ளதுபோன்று கூட்டுக் குடும்பத்தில் 1ஆம் பிரதிவாதியும், அவருடைய சகோதரரான இறந்துபோன 12ஆம் பிரதிவாதியும் கூட்டு குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தபோது, கூட்டு குடும்ப நன்மைக்காக, குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்காக, குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற பெயரிலும் மற்றும் குடும்ப கர்த்தா என்ற முறையிலும், 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் பெயரிலும் மற்றும் 1ஆம் பிரதிவாதியின் பெயரிலும் சில சொத்துக்கள் கூட்டாக வாங்கப்பட்டுள்ளது என்று விசாரணை நீதிமன்றம் சரியான கோணத்தில் தீர்வு கண்டுள்ளது என்றே இந்த நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:37 +0530

19. பிரதிவாதிகள் தரப்பில், பிரதிவாதிகள் 7 மற்றும் 8 இளவர்களாக இருக்கும்போது, 1ஆம் பிரதிவாதியின் மனைவியான 9ஆம் பிரதிவாதியை காப்பாளராக காட்டி வா.சா.ஆ.4 –ன்படி தாவா 23 மற்றும் 24 இலக்கச் சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்றும், அவை மேற்படி இளவர்களின் சொத்துக்கள் என்றும் கூறியுள்ளார். 3ஆம் பிரதிவாதியின் கணவரான மேற்படி இளவர்களின் தகப்பனார் பி.சா.4 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தில், 3ஆம் பிரதிவாதியை அவர் வீட்டிற்கு தெரியாமல் அழைத்து சென்று திருமணம் செய்ததாகவும், அவர் மூலம் 7 மற்றும் 8 பிரதிவாதிகள் பிறந்தனர் என்றும், 7 மற்றும் 8 இளவர் பிரதிவாதிகளின் பெயரில் சொத்துக்கள் வாங்கும்போது, முதல் மனைவி மூலம் ஏதாவது பிரச்சனை வரும் என்பதை தவிர்ப்பதற்காகவே, அவருடைய சொந்த பணத்தை கொடுத்து, அவருடைய மாமியாரான 9வது பிரதிவாதி அழகம்மாள்–ஐ காப்பாளராக காட்டி இளவர்கள் பெயரில் தாவா சொத்துக்கள் 23 மற்றும் 24 ஆகியவை வாங்கப்பட்டன என்று அவருடைய நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளார். ஆனால் அதற்கு முற்றிலும் முரணாக அவருடைய குறுக்கு விசாரணையில், தன் மாமியாரான 9வது பிரதிவாதி தான், கிரையத்தொகையை கொடுத்தார் என்று ஒப்புக்கொண்டுள்ளார். பி.சா.5 அழகம்மாளுக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இருப்பதாக நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் எவ்வித குறிப்பான, வலுவான சாட்சியமும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிறுத்தப்படவில்லை. இந்த சூழ்நிலையில், 7 மற்றும் 8 இளவர் பிரதிவாதிகளின் பெயரில் வா.சா.ஆ.4 கிரையப்பத்திரம் மூலம் பெற்ற சொத்துக்கள் அவர்களுடைய தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றும், அவை கூட்டுக்குடும்ப சொத்துக்கள் தான் என்று வாதிகள் தரப்பு வாதமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

20. பிரதிவாதிகள் தரப்பில் மற்றொரு முக்கியமான எதிர்வாதமாக வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை, 1ஆம் பிரதிவாதி,

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:41 +0530

இளவர்களான 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி 1 முதல் 6 இலக்கச் சொத்துக்கள் பொறுத்து வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது. அதேபோன்று 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாக 1ஆம் பிரதிவாதி கூறியுள்ளார். மேற்படி எதிர்வாதமானது சட்டப்படியும், சங்கதிகளின்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. ஏற்கனவே இந்நீதிமன்றம் 1ஆம் பிரதிவாதியின் பெயரிலும் அவருடைய சகோதரர் சதாசிவம் பெயரிலும் வாங்கப்பட்ட சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்று தீர்மானித்துள்ளது. அவ்வாறு பிரிக்கப்படாத கூட்டுக் குடும்ப சொத்துக்களை பொறுத்து ஒரு கூட்டு உரிமையாளரான 1ஆம் பிரதிவாதி தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதித் தருவதற்கு உரிமை இல்லை என்று வாதிகள் தரப்பில் குறிப்பாக எடுத்துரைத்து, அதற்கு ஆதரவாக நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் (N.Kalavathy Vs.Sriramulu Naidu (2023 (5) CTC 598) வழக்கில், தீர்மானித்துள்ள சங்கதியை சுட்டிக்காட்டியுள்ளனர். மேற்படி வழக்கில் நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு கண்டுள்ளது.

Hindu Succession Act, 1956 (30 of 1956), Section 6 – Undivided Coparcenary Interest – Devolution of interest in Coparcenary property - Gift of undivided Co-parcenary interest – Necessity of prior Consent of other Coparcener – Gift by Coparcener of his undivided interest in coparcenary property either to stranger or to another Coparcener, without consent of other Coparcener is void.

Facts: Plaintiff instituted suit for partition and separate Possession claiming 1/3rd share in the suit properties. Plaintiff claimed share

in the properties in the capacity of Coparcener of join family property. Defendant filed a written statement contending that the undivided share in the coparcenar property was settled by other co-parcener which would amounts renunciation. Trial Court dismissed the suit by accepting the contents of defendant. Hence, appeal to High Court.

Held: Learned Senior Counsel appearing for the appellant relied upon the judgment of Hon’ble Supreme Court in the case of Thamma Venkata Subamma’s case, 1987(3) SCC 294. The Hon’ble Supreme Court in the above Judgment, considered the issue whether a Gift by a Coparcener of his undivided coparcenery Interest to another Coparcener without the consent of other Coparceners is void. Referring to Sections 6 and 30 and several other precedents, the Hon’ble Supreme Court though observed that there is no specific textual authority prohibiting alienation by Gift, held in unmistakable terms that a Coparcener can make Gifts of his undivided Interest in the coparcenery property to another Coparcener or to a stranger only with the prior consent of all other Coparceners and that the Gift/Settlement without consent is void.

பிரிக்கப்படாத சொத்தைப் பொறுத்து ஒரு கூட்டுரிமையாளர் எழுதிக்கொடுக்கும் தான செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து, நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள சங்கதிகள் இவ்வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு பொருந்தக்கூடியதாகவே உள்ளது. அதனடிப்படையில், பிரதிவாதிகள் குறிப்பிடும்

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:49 +0530

தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் வாதிகளின் உரிமையை எவ்வகையிலும் பாதிக்காது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. வாதிகள் தரப்பில் பிராதிலும், வாசா.1 அவருடைய நிரூபண வாக்குமூலத்திலும், 1989ஆம் ஆண்டுக்கு முன்பே 3 மற்றும் 4 பிரதிவாதிகள் திருமணமாகி அவருடைய கணவரின் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் என்றும், அவர்களுக்கு சீர் செய்யப்பட்டு விட்டதால், எந்தவித பாக உரிமையும் கிடையாது என்று வாதிகள் தரப்பில் ஒரு வாதம் எடுத்துரைக்கப்பட்டது. மேற்படி வாதிகள் தரப்பு வாதமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளது. மேலும் 4வது பிரதிவாதி மேற்படி சங்கதியை மறுத்துள்ளார். 2005ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டத்தின்படி 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெண்பாலாக உள்ள நிலையில், ஒரு ஆண்மகனுக்கு இணையாக பெண்பாலுக்கும் சட்டப்படி பாகம் உள்ள நிலையில், 1ஆம் பிரதிவாதிகளின் வாரிசுகளான 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கும் கூட்டுக் குடும்ப சொத்தில் சம பாகம் கிடைக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22. வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இறந்துபோன கண்ணுசாமியின் வாரிசுகளில் ஒருவரான அழகம்மாளுக்கு ஒதுக்கப்படும் பங்கை பொறுத்து, 2 மற்றும் 3 வாதிகளும் கூட்டு பங்குரிமையாளர் என்றும், மேற்படி சொத்துக்களில் பிரிக்கப்படாத பங்கு அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று ஒரு வாதம் எடுத்துரைத்தார். அம்மாதிரி கண்ணுசாமி இறந்தபின்னர் அவருடைய வாரிசுகளில் ஒருவரான, அவருடைய தாயார் பங்கையும் சேர்த்து, அதாவது வாதிகளுடன் சேர்ந்து அனைவரும் கூட்டாக கூட்டுரிமையாளர் என்ற அடிப்படையில் அனுபவம் செய்து வந்ததாகவும், வாதிகளின் பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பாக கூறப்படவும்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:54 +0530

இல்லை. அதுகுறித்த வாய்மொழி சாட்சியும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்த சூழ்நிலையில், வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரையும், சுட்டிக்காட்டப்பட்ட முன் தீர்ப்பின் பொருண்மையும் இவ்வழக்கின் சந்தர்ப்பங்களில் பொருந்தக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

23. வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் விசாரணை நீதிமன்றத்தில் வாதிகளுக்கு 3/28 பாகம் கிடைக்கத்தக்கது என்று தீர்மானித்துள்ளது என்றும், அது சரியான கணக்கீடு இல்லை என்றும், வாதிகளுக்கு சட்டப்படி 201/540 பாகம் கிடைக்கத்தக்கது என்று எடுத்துரைத்தார். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் வைத்து பார்க்கும்போது, தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றும், அச்சொத்துக்களில், 1ஆம் பிரதிவாதி, 1ஆம் வாதியின் கணவரான இறந்துபோன கண்ணுசாமி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு சமமான பாகம் உள்ளது என்று ஏற்கனவே விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ள சங்கதிகளில் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில், பாகம் குறித்து அவ்வாறு பிரிக்கப்படும்போது, மேற்படி 5 கூட்டு உரிமையாளர்களுக்கும் தலா 5/25 பாகம் கிடைக்கத்தக்கதாக உள்ளது. மேலும் 1ஆம் வாதியின் கணவரின் ஒரு வாரிசு என்ற அடிப்படையில், அவருடைய பங்கிலிருந்தும் 9ஆம் பிரதிவாதிக்கு பாகம் கிடைக்கக்கூடியதாக உள்ளது. எனவே, இறந்துபோன 1ஆம் வாதியின் கணவரான கண்ணுசாமியின் பங்கான 5/25 ஆனது அவருடைய வாரிசுகளான 1 முதல் 3 வாதிகளுக்கும், அவர் தாயாரான 9ஆம் பிரதிவாதிக்கும் தலா $1\ ^{1/4}/25$ பாகம் கிடைக்கத்தக்கதாக உள்ளது. எனவே வாதிகளுக்கு $3\ ^{3/4}/25$ பாகமும், 9ஆம் பிரதிவாதிக்கு $1\ ^{1/4}/25$ பாகமும் கிடைக்கத்தக்கதாக உள்ளது. பின்னிட்டு இறந்துபோன 1ஆம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:36:58 +0530

பிரதிவாதியின் பங்கான 5/25 ஆனது அவருடைய வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகள், வாதிகள் மற்றும் அவர் மனைவியான 9ஆம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதாக உள்ளது. அதனடிப்படையில், அவருடைய வாரிசுகளுக்கு சமமாக பிரித்துக் கொடுக்கும்போது, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தலா 6/25 (5/25 + 1/25) பாகமும், வாதிகளுக்கு 4 $^{3/4}$/25 (3 $^{3/4}$/25 +1/25) பாகமும், 9ஆம் பிரதிவாதிக்கு 2 $^{1/4}$/25 பாகமும், கிடைக்கத்தக்கதாக உள்ளது. எனவே பாகத்தை பொறுத்தமட்டில் விசாரணை நீதிமன்றம் முடிவில் இந்நீதிமன்றம் தலையிட வேண்டிய அவசியம் உள்ளது என்றும், அந்த அடிப்டையில், வாதிகளுக்கு 4 $^{3/4}$/25 பாகம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சினை எண்கள்.1, 3 மற்றும் 4–க்கு தீர்வு காண்கிறது.

24. தாவா 'பி ' அட்டவணைச் சொத்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதற்கு வாதிகள் தரப்பில் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் விசாரணை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணத்தைதான் வாதிகள் மேல்முறையீட்டிலும் செலுத்தியுள்ளனர். எனவே, தாவா 'பி' அட்டவணைச் சொத்து பொறுத்தும், நீதிமன்றக் கட்டணம் குறித்தும் விசாரணை நீதிமன்றம் சரியான கோணத்தில்தான் தீர்மானித்துள்ளது என்றே இந்நீதிமன்றம் பிரச்சினை எண்.2–க்கு தீர்வு காண்கிறது.

<u>25. பிரச்சினை எண்.5:</u>

மேற்படி அனைத்து சங்கதிகளை கருத்தில்கொண்டு பார்க்கும்போது, இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இம்மேல்முறையீட்டை பொறுத்து உறுதி செய்யப்படுகிறது என்று இந்நீதிமன்றம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:37:02 +0530

<u>26. மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023:-</u>

இறுதியாக, இம்மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. தாவாச் 'ஏ' அட்டவணைச் சொத்துக்களில் வாதிகளுக்கு 4 $^{3/4}$/25 பாகம் கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. இதர பரிகாரம் பொறுத்து விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

<u>27. மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024:-</u>

இறுதியாக, இம்மேல்முறையீடு வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

இருதரப்பினர்களின் உறவுமுறை மற்றும் வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு, அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் ஒலி வடிவில் குறிப்பு எடுக்கப்பட்டு பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.06 19:37:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

இதன் நகல்
சார்பு நீதிபதி, பெரம்பலூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
பெரம்பலூர்.
பொதுவான வரைவு/தெளிவு தீர்ப்புரை
மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2023
&
மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2024
தேதி: 06.04.2026.